மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, ஜனாதிபதி ஒப்புதல் பெறப்படாமல் இருக்கிற சட்டம் பரம்பரை அறங்காவலர்களை நீக்குகிற சட்டம் அல்ல. அது சில மடங்களுடைய நிர்வாகங்களை சீர் திருத்துவதற்காக கடந்த ஆண்டுகளில் சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட சட்டம் ஆகும். ஆனால் இப்போது நாம் புதியதாக, பரம்பரை அறங்காவலர்களை நீக்குவதற்கும், அதை திருத்தியமைப்பதற்கும் வழிகாணுகிற வகையில் புதிய சட்டத்தை உருவாக்க இருக்கிறோம். முன்னால் இப்படிப்பட்ட பரம்பரை அறங்காவலர்கள் இருக்கிற, மடாதிபதிகள் இருக்கிற கோவில்களில் நிர்வாக அதிகாரிகளை கூட போடக் கூடாது என்று அவர்கள் நீதிமன்றத்திலே தடை ஆணையைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே தான் இந்த நிர்வாகத்திலே நம்முடைய அதிகாரிகளை அனுப்பி விவரங்களைப் பெறமுடியாமல் இருக்கிறது.

தமிழ் நாட்டிலுள்ள சுற்றுலா இடங்கள் பற்றிய செய்திப் படம்

*வினா எண். 286—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சுற்றுலா இடங்கள் பற்றிய சினிமா படம் எடுக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது இத்திட்டம் தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) அண்ட் (ஆ): தற்போது 'தமிழகத்தில் ஓய்விடங்கள்' (Holiday Resorts of Tamil Nadu) என்னும் தலைப்பில் ஒரு சுற்றுலா செய்திப்படம் வண்ணத்தில் தமிழ்நாடு அரசு செய்திப்பட பிரிவின் மூலம் அரசு தயாரித்துக் கொண்டிருக்கிறது. இந்த செய்தி படத்தின் தயாரிப்பு 1983 மார்ச் மாத இறுதிக்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலுள்ள சுற்றுலா மையங்களை வரலாற்று சிறப்புடன் வெளிநாடுகளில் விளம்பரப்படுத்த அரசிடம் சிறப்புத் திட்டங்கள் ஏதாவது இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய சிறப்புமிக்க சுற்றுலாத் தலங்கள் நல்ல படங்களின் மூலம், போஸ்ட்கார்டுகளின் மூலம், புத்தகங்

1983 பிப்ரவரி 15]

களின் மூலம் வெளிநாடுகளில் பரப்புவதற்காக முயற்சிகள் முன்பே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதிலே ஒரு முயற்சி தான் இந்த திரைப்பட தயாரிப்பு.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி தயாரிக்கப்படுகிற படங்கள் ஆங்கிலம் மற்றும் ஐரோப்பிய மொழிகளிலும் மொழிபெயர்த்து அங்கே திரையிடுவதற்கு அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்கிலத்திலே தயாரிக்கப்படுகிறது. மற்ற ஐரோப்பிய மொழிகளில் தயாரிக்கிற சூழ்நிலை இப்போது இல்லை.

[முற்பகல் 9-40]

திரு. இரா. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு தயாரித்துள்ள சுற்றுலா இடங்களைப் பற்றிய அந்த சினிமா படத்தில் வரலாற்று சிறப்புமிக்க பூம்புகார், தஞ்சாவூர் போன்ற இடங்கள் இடம் பெறுகின்றனவா என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்பொழுது தயாரிக்கின்ற இந்தப் படம் இரண்டு பிரிவுகளாகத் தயாரிக்கப்படுகிறது. 20 நிமிடங்கள் ஓடக்கூடிய சுமார் 2,000 அடியிலே இருக்கக்கூடிய படமாகும் அது. அதிலே, எந்த அளவுக்கு முக்கியமான பகுதிகளை, இயற்கைக் காட்சிகளை, மலைவளங்களைக் காட்ட முடியுமோ, அப்படி பிரித்து, தொகுத்து காட்டப்படும். அப்படி முக்கியமான பகுதிகள் விடப்பட்டிருந்தால் அடுத்துவரும் நிகழ்ச்சிகளிலே அப்படிப்பட்ட பகுதிகள் இணைக்கப்படும்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, இன்றைய தினம் மக்களுடைய ஒற்றுமைக்கும் இந்தியாவினுடைய ஒற்றுமைக்கும்கூட இந்தக் கலாச்சாரப் பரிமாற்றம் மிக முக்கியமாக தேவைப்படுகிறது. ஆகவே, இந்தி திணிப்பை எதிர்ப்பது வேறு. இந்தியாவிலே இருக்கக்கூடிய 35 கோடி மக்கள் இன்று இந்தி பேசுகிற மாநிலங்களிலே வாழ்கிறார்கள். தமிழகத்தினுடைய நாகரீகத்தையும், நம்முடைய தொன்மையான பண்பாட்டையும் புரிந்து கொள்வதற்கே இப்படிப்பட்ட சினிமா படங்கள் அவர்களுக்கு உதவி செய்யும். அந்த முறையிலே இந்தியிலும் இப்படிப்பட்ட படத்தைத் தயாரிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தியாவிலே வாழ்கிற மக்களுக்குப் பரப்புகிற வகையில், அவர்கள் புரிந்துகொள்கிற வகையில், ஆங்கிலத்தில் தயாரித்தாலே போதும் என்று அரசு கருதுகிறது. மத்திய சுற்றுலாத் துறை வேண்டுமானால் இந்தியாவிலே இருக்கிற சிறப்புகளை எடுத்துச் சொல்கிற அந்தத் திட்டத்தின் அடிப்படையில் இந்தியிலே தயாரிக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அரசுக்கு அவர்களுடைய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் இந்த யோசனையைத் தெரிவித்தால் தமிழகத்திற்கும் பயன் உள்ளதாக அமையும்.

கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை அமைக்கும் திட்டம்

*வினா எண். 287—திரு. து. புருஷோத்தமன், மற்றும் திரு. பெ, சு. திருவேங்கடம் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை அமைக்கும் பணி இப்பொழுது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை அமைப்பது பற்றிய ஒரு அறிக்கை தருவதற்காக நிபுணர் குழு ஒன்று பொதுப்பணித்துறைத் தலைமைப் பொறியாளர் தலைமையில் அமைக்கப்பட்டது. நிபுணர் குழுவின் அறிக்கை கிடைக்கப்பெற்று, அறிக்கையினுடைய விவரங்களைப் பற்றி அரசு மேல் ஆய்வு நடத்திக் கொண்டிருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரியில் நம்முடைய புலவர் திருவள்ளுவருடைய சிலையைத் திறப்பது பற்றி எதற்காக குழு அமைக்கப்பட்டுள்ளது? இடம் தேர்ந்தெடுக்கப்படுவதற்காகவா ? அல்லது வேறு எந்த காரணத்திற்காக அந்தக் குழு அமைக்கப்பட்டது ? எப்பொழுது அமைக்கப்பட்டது ? எந்த அடிப்படையிலே அவர்கள் ஆய்வு செய்கிறார்கள் என்பதை அறிவிப்பார்களா ?